**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. | : CC –173/2024 (160/2020) |
| Deposition of witness for | | Prosecution | : LW 7– PW 6 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : சுப்பிரமணி | Father's Name: | ராமசாமி |
| | | Husband Name: | |
| Village/Town | : காட்டுமலையனூர் | Taluk | : |
| | | Calling | : விவசாயம் |
| | | Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.05.2026

**2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சாட்சியின் அடையாளம் ஆதார்கார்டின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காட்டுமலையனூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.5 ராஜா என்பவரை தெரியும். கடந்த 8 வருடத்திற்கு முன்பு ஒருநாள், தேதி மாதம் நினைவில்லை, பகல் 11 மணியளவில் எங்கள் ஊர் நாகப்பன் வீட்டினிடம் நான் சென்றுக்கொண்டிருந்த போது அங்கு ஏற்கனவே அ.சா.5 ராஜா அங்கிருந்தார். அங்கு வேட்டவலம் போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் ராஜாவும் சாட்சியா கையொப்பம் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள

1வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆகும். எந்த வழக்கிற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

சிலம்பரசனுக்கும் நாகப்பனுக்கும் ஏற்பட்ட சண்டை வழக்கு சம்மந்தமாகத்தான் போலிசார் எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பற்ற வேண்டி அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,
KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. | : CC –173/2024 (160/2020) |
| Deposition of witness for | | Prosecution | : LW 6– PW 5 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : ராஜா | Father's Name: | முத்தன் |
| | | Husband Name: | |
| Village/Town | : காட்டுமலையனூர் | Taluk | : |
| | | Calling | : கட்டிடவேலை |
| | | Age | : 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.05.2026

**2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சாட்சியின் அடையாளம் ஆதார்கார்டின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காட்டுமலையனூர் கிராமத்தில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 7 வருடத்திற்கு முன்பு ஒருநாள் தேதி, மாதம் நினைவில்லை இரவு 07.00 மணியளவில் நான் எனது வீட்டிடம் நின்றிருந்த போது வேட்டவலம் காவல் நிலையப் போலிசார் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்ன வழக்கிற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 30.01.2019ம் தேதியன்று நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவரும், காலை 11.00 மணி அளவில் எங்கள் ஊர் சிலம்பரசன் மாமன் சேகர் என்பவரின் மெத்தை வீட்டின் முன்பு நின்றுருந்ததாகவும், அப்போது அங்கு வந்த வேட்டவலம் காவல் நிலைய போலிசார் சண்டை வழக்குச் சம்மந்தமாக சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும், அதில் நானும் சுப்பிரமணி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் நடந்த உண்மை சம்பவங்களை கூறிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பற்ற வேண்டி அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC –173/2024 (160/2020) |
| Deposition of witness for | Prosecution : LW5 – PW4 |
| | Defence : |
| | Court : |
| Name : விக்ரமன் | Father's Name: சேகர் |
| | Husband Name: |
| Village/Town : காட்டுமலையனூர் | Taluk : |
| | Calling : டிரைவர் |
| | Age : 29 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.05.2026

**2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சாட்சியின் அடையாளம் ஆதார்கார்டின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காட்டுமலையனூர் கிராமத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1ம் எதிரி நாகப்பன் என்பவரை தெரியும். அ.சா.1–சிலம்பரசன் எனது அத்தை மகன் ஆவார். அ.சா.2–சாந்தி, அ.சா.3–சுகந்தி ஆகியோரைத் தெரியும். கடந்த 29.01.2019ம் தேதியன்று காலை 08.30 மணியளவில் பச்சையம்மாள் வீட்டின் எதிரில் 1ம் எதிரி நாகப்பனுக்கும் பச்சையம்மாவுக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. சிலம்பரசன் அப்போது ஊரில் இருந்து வந்தார். அவரிடமும் எதிரிகள் வாய்தகராறு செய்தார். சிலம்பரசனை நாகப்பனும், சந்துருவும், கட்டையால் இடது மார்பில் அடித்தார்கள். சுப்பிரமணியும் காமாட்சியும்

துடப்பத்தால் சிலம்பரசனின் முதுகில் அடித்தார்கள். அப்போது அங்கு ஏகாம்பரம், சாந்தி, சுகந்தி ஆகியோர் இருந்தார்கள். நான் சண்டையை விலக்கிவிட்டேன். அதன் பிறகு எனது அப்பா சேகர் சிலம்பரசனை திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார். அங்கு சிலம்பரசன் 3 நாட்கள் சிகிச்சைப் பெற்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**